சட்ட ஓம்புட்ஸ்மன்

# இங்கே உதவி செய்ய உள்ளோம்

**உங்கள் இடம் உங்கள் உடைய சட்டத்தரணி தொடர்பாக ஒரு முறைப் பாடு இருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்**

## நாங்கள் இங்கே சட்ட முறைப் பாடுகள் தொடர்பாக உதவி செய்ய உள்ளோம்?

### நாங்கள் என்ன வேலை செய்கிறோம்?

உங்களுக்காக வேலை செய்த உங்கள் உடைய சட்டத்தரணிகள் தொடர்பான முறைப் பாடுகளை தீர்த்து வைக்க நாங்கள் உதவி செய்வோம். ஆனால் நீங்கள் அது பற்றி அவர்கள் இடம் ஒரு முறைப்பாட்டை மேற் கொண்ட பின்பே நாங்கள் இதனைச் செய்ய முடியும்.

### எங்கள் உடைய சேவை இலவசம் ஆனது.

நாங்கள் சுயாதீனம் ஆனவர்கள். அத்துடன் நாங்கள் எந்த விதமான பக்கச் சார்பும் எடுப்பது இல்லை. நாங்கள் நீதி மன்றத்தின் ஒரு பகுதி அல்ல அத்துடன் நாங்கள் சட்டத் தரணிகளுக்காக வேலை செய்வது இல்லை. நாங்கள் ஒரு நியாயமான தீர்வினை வழங்கும் முகமாக உங்கள் உடைய முறைப் பாட்டில் உள்ள அனைத்து நிகழ்வுகளையும் சீர் தூக்கிப் பார்ப்போம்.

சட்டத்தரணிகள் ஏதாவது விடயத்தை பிழையாக செய்து உள்ளார்கள் என நாங்கள் நினைத்தால் அதனை சீர் படுத்த எங்களுக்கு அதிகாரங்கள் உள்ளன. ஆனால் நீங்கள் உங்கள் உடைய சட்டத்தரணிக்கு முதலில் முறைப்பாடு செய்ய வேண்டும்.

LEGAL OMBUDSMAN

## நாங்கள் எது சம்பந்தமாக உதவி செய்ய முடியும்?

நாங்கள் பல் வேறு வகையான முறைப்பாடுகளை பார்வை இடலாம்.

உதாரணமாக நீங்கள் உங்கள் உடைய சட்டத்தரணி பின் வரும் விடயங்கள் தொடர்பாக நடந்து கொண்ட விதத்தில் திருப்தி இல்லாவிடில்:

- உங்கள் உடைய பரோல் (தண்டனைக் கால முடிவுக்கு முதல் விடுதலையாகி செல்லல்) தொடர்பான விடயங்களைக் கையாண்ட விதம்
- ஒரு தனிப் பட்ட விதத்தில் ஏற்படுத்தப் பட்ட காயம் அல்லது மருத்துவ கவனம் இன்மை தொடர்பில் வேலை செய்த விதம்
- குற்றம் தொடர்பான விளக்க விசாரணையின் பின்பு அதன் விளைவுகளைத் தீர்த்த விதம்
- உங்களை நீதி மனற்றத்தில் பிரதி நிதித்துவம் செய்த விதம்
- தண்டனை அல்லது குற்றத் தீர்ப்புக்கு எதிரான ஒரு மேன் முறையீட்டைக் கையாண்ட விதம்
- உங்களை ஒரு மாற்றம் உடன் அல்லது ஒரு விடயத்தை மீள வகைப் படுத்தலில் உதவி செய்த விதம்
- ஒரு இறுதி விருப்பாவணம், அல்லது குடும்பம் அல்லது பிள்ளைகள் தொடர்பான விடயங்கள் இனைக் கையாண்ட விதம்

நீதி மன்றம் ஒரு தீர்மானத்தினை எடுத்த விடங்களை நாங்கள் பார்வை இட முடியாது, உங்கள் உடைய சட்டத்தரணி செய்த விடயத்தை பற்றியே நாங்கள் கருத்தில் கொள்ள முடியும். எங்களால் உங்களுக்கு உதவி செய்ய முடியாவிடில் யார் உங்களுக்கு உதவி செய்ய முடியும் என எங்களால் கூற முடியும்.

**உங்களை சிறைச் சாலைக்கு வெளியே எடுக்க எங்களால் முடியாது அல்லது உங்களது தண்டனையை இல்லாமல் ஆக்க அல்லது குறைக்க எங்களால் முடியாது.**

## யார் சட்ட ஒம்புட்ஸ்மன் உடைய சேவையைப் பாவிக்கலாம்?

எங்கள் உடைய சேவை ஆனது அனைவருக்கும் திறந்ததாக பகிரங்கமாக உள்ளது. நீங்கள் ஒரு சிறைக் கைதி (குற்றத்

தீர்ப்பு அளிக்கப் பட்ட, காவல் வைப்பில் உள்ள, குடியியல் சிறைக் கைதிகள், இளைய குற்றவாளிகள், மற்றும் குடி வரவு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டு இருக்கும் ஆட்கள்) என்ற வகையில் எங்கள் உடைய சேவையை பயன் படுத்த உங்களுக்கு உரித்து உள்ளது.

## யார் எங்கள் உடன் தொடர்பு கொள்ள வேண்டும்?

நீங்கள் நீங்களாகவே எங்கள் உடன் தொடர்பு கொள்வது சிறந்தது. ஆனால் சில சமயங்களில் அது இலகுவானது அல்ல என்பதை நாங்கள் உணர்வோம். உங்களுக்காக வேறு யாராவது எங்களைத் தொடர்பு கொள்ளலாம். உதாரணமாக ஒரு குடும்ப அங்கத்துவர் அல்லது நண்பர். ஆனால் அவர்கள் உங்களுக்காக கதைப்பதற்கு நீங்கள் அனுமதி அளித்து உள்ளீர்களா என்பதை நாங்கள் உங்கள் இடம் இருந்து உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

நீங்கள் வேறு யாராவது உங்களுக்காக கதைப்பதற்கு பணம் செலுத்த வேண்டி இருப்பின் அந்தப் பணத்தை நீங்களே அவருக்கு செலுத்த வேண்டும்.

## எவ்வாறு ஒரு முறைப் பாட்டை மேற் கொள்வது?

### படி 1. உங்கள் உடைய சட்டத்தரணி இடம் கூறவும்

ஏதாவது ஒரு பிரச்சனை இருந்தால் அல்லது ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக நீங்கள் சந்தோசமாக இல்லாவிடில் முதலில் நீங்கள் உங்கள் உடைய சட்டத்தரணிக்கு அது பற்றி கூற வேண்டும். ஆகவே அவர்களுக்கு அதனை தீர்த்து வைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

நீங்கள் ஒரு முறைப் பாட்டைச் செய்ய விரும்பினால் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அது பற்றி அவர்களுக்கு கூறவும். நீண்ட காலத்திற்கு விட வேண்டாம்.

உங்களுக்கு உங்கள் உடைய சட்டத்தரணி உடன் தொடர்பு கொள்வதில் ஏதாவது பிரச்சனைகள் இருந்தால் அடுத்ததாக என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தால் தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

**படி 2. உங்கள் உடைய சட்டத்தரணிக்கு விடயங்களைத் தீர்த்து வைக்க போதுமான அளவு காலம் கொடுக்கவும்.**

விடயங்களைத் தீர்த்து வைக்க எட்டு கிழமைகள் வரை உங்கள் உடைய சட்டத்தரணிக்கு காலம் கொடுக்கவும். எட்டு கிழமைகளின் பின்பு இன்னமும் நீங்கள் சந்தோசம் இல்லாவிடில் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக எங்களுக்கு அறியத் தரவும். இது ஏனெனில் ஒரு முறைப் பாட்டை மேற் கொள்வதற்கு கால எல்லைகள் உள்ளன.

**படி 3. எங்கள் இடம் முறைப்பாடு செய்யவும்.**

உங்கள் உடைய சட்டத்தரணி உடன் விடயங்களைத் தீர்த்து வைக்க முயற்சித்த பின்பு எவ்வளவு விரைவாக வர சாத்தியமோ அவ்வளவு விரைவாக எங்கள் இடம் வரவும்.

அவர்கள் உடைய இறுதி தீர்வு தொடர்பாக உங்களுக்கு சந்தோசம் இல்லாவிடில் உங்களுக்கு அது பற்றி எங்கள் இடம் முறைப்பாடு செய்ய ஆறு மாதங்கள் உள்ளன.

பின்வரு் விடயங்களை எங்களுக்கு அறியத் தந்தால் அது எங்களுக்கு உதவியாக இருக்கும்:

- உங்கள் உடைய சட்டத்தரணி உடைய பெயர் மற்றும் விலாசம்
- ஒரு முறைப் பாடு உள்ளது என நீங்கள் முதன் முதலில் கூறிய திகதி
- நீங்கள் முறைப் பாடு செய்யும் பிரச்சனை பற்றி அதனை நீங்கள் முதன் முதலில் அறிந்து கொண்ட திகதி
- அதனைப் பற்றி உங்களுக்கு அவர்கள் என்ன கூறி உள்ளனர்

**தயவு செய்து எந்த விதமான மூல ஆவணங்களையும் எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டாம். ஏனெனில் எங்களால் பெற்றுக் கொள்ளப் பட்ட அனைத்து ஆவணங்களும் நாங்கள் பின்னர் அழித்து விடுவோம்.**

## அடுத்ததாக என்ன நிகழும்?

நாங்கள் பார்வை இடும் அநேகமான முறைப் பாடுகளை எது நியாயமானது என கருதப் படுகின்றதோ அதனை அனைவரையும் ஏற்றுக் கொள்ள வைப்பதன் மூலம் விரைவாக தீர்த்து வைப்போம். தேவைப் படின் நாங்கள் ஒரு

பிரச்சனையை மிக விபரமாக பார்வை இடுவோம். ஆனால் இதற்கு அதிக காலம் தேவைப் படும்.

உங்கள் உடைய சட்டத்தரணிகள் நன்றாக செயற் படவில்லை என நாங்கள் நினைத்தால் நாங்கள் அவர்களை பின் வரும் விடயங்களைச் செய்யுமாறு கேட்டுக் கொள்வோம்:

- உங்கள் இடம் மன்னிப்பு கொரச் சொல்லலாம்
- உங்களுக்கு தேவையான தகவலை கொடுக்கச் சொல்லலாம் அல்லது உங்கள் உடைய ஆவணங்களை உங்கள் இடம் கொடுக்க சொல்லலாம்.
- உங்களுக்காக மேலும் வேலை செய்யச் சொல்லலாம்.
- நீங்களாக பணம் செலுத்தி இருந்தால் உங்கள் உடைய பணத்தில் ஒரு பகுதியை அல்லது முழுப் பணத்தையும் திருப்பி கொடுக்க சொல்லலாம்.
- நீங்கள் இழந்து இருந்தால் அல்லது கூடாத விதமாக நடாத்தப் பட்டு இருந்தால் உங்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்க சொல்லலாம். இது £ 50,000 வரை இருக்கலாம். ஆனால் வழமையாக £250 அல்லது அதற்கு குறைவானதாக இருக்கும்.

## எங்கள் உடன் எவ்வாறு தொடர்பு கொள்வது

**எங்களுக்கு பின்வரும் விலாசத்திற்கு எழுதவும்:**

Legal Ombudsman
PO Box 6167
Slough
SL1 0EH

**தயவு செய்து கவனிக்கவும் விதி 39 ஆனது எங்களை உள் அடக்க மாட்டாது. ஆகவே நீங்கள் ஏதாவது எழுதி அனுப்பும் பொழுது அதனை இரகசியமாக கையாளவும் எனக் குறிப்பிடவும்.**

**எங்களை தொலை பேசி மூலம் தொடர்பு கொள்ளவும்:**

0300 555 0333
மு.ப 8.30 - பி.ப 5.30

**அழைப்புகள் இலவசம் ஆனவை அல்ல - நீங்கள் அவற்றிற்கு**

பணம் செலுத்த வேண்டும். நீங்கள் இந்த இலக்கத்தைக் கேட்டு உங்கள் உடைய **PIN** இல் இடலாம்.

எங்கள் உடைய மினி கொம் இல:

0300 555 1777
மு.ப 8.30 - பி.ப 5.30

உங்கள் உடைய சிறைச் சாலை ஆனது மின் அஞ்சலை சிறைக் கைதி சேவைக்கு உபயோகித்தால் நாங்கள் இந்த வகையான தொடர்பு மூலம் உங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**உங்களுக்கு வேறு ஒரு மொழியில் பெரிய அச்சு எழுத்தில் பிறெயிலில் அல்லது ஒலிப் பதிவு CD இல் தகவல் தேவைப் பட்டால் எங்களைத் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.**